பெ.தெ.லீ. செங்கல்வராய நாயக்கர் அறக்கட்டளை
எண் 2–3, ஈ.வே.கே. சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை –7

"வன்னிய குல க்ஷத்திரிய வள்ளல் பெ.தெ.லீ. செங்கல்வராய நாயக்கர் அவர்களது வரலாறு அல்லது வன்னிய குல க்ஷத்திரிய வள்ளல்களைப் பற்றிய வாழ்க்கை வரலாறு புத்தகங்கள் வெளியிட்டு சமுதாய விழிப்புணர்வு ஏற்படுத்திய தமிழ் படைப்பாளி ஒருவரை தேர்ந்தெடுத்து வள்ளல் பெ.தெ.லீ. செங்கல்வராய நாயக்கர் அவர்களின் நினைவாக ரூ.50,000/–ரொக்கப் பரிசு வழங்க உள்ளதால், தகுதியுள்ள படைப்பாளிகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ளபடி தங்களால் வெளியிடப்பட்ட புத்தகங்கள் மூன்று நகலுடன் 31.10.2018 தேதி மாலை 5.45க்குள் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ மேற்கண்ட முகவரியில் கிடைக்கும் வகையில் விண்ணப்பிக்கும் படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

செயலாளர்

<u>பத்திரிக்கை செய்தி</u>

வள்ளல் பெ.தெ.லீ.செங்கல்வராய நாயக்கர் அவர்கள் தமிழகத்தின் தலை சிறந்த தவப்புதல்வர்களுள் ஒருவர். 1829 முதல் 1874 வரை 45 ஆண்டு காலமே வாழ்ந்த இவர் தனது வாழ்நாளில் அளப்பரிய செல்வத்தை ஈட்டியவர். தனது மரணத்திற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, தனது அனைத்து சொத்துக்களையும் தர்ம சிந்தனையோடும், தொலைநோக்கோடும், தொழிற்கல்வியே முன்னேற்றத்திற்கான வழி என தனது உயிலில் எழுதி கல்விக்காகவும், இலவச மருத்துவ வசதிக்காகவும், அன்னதானத்திற்காகவும், வன்னிய உறுப்பினர்களை கொண்ட அறக்கட்டளை ஒன்றை ஏற்படுத்தியவர்.

140 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்பட்டு வரும் இந்த அறக்கட்டளை, தனது நிறுவனர் வள்ளல் பெ.தெ.லீ. செங்கல்வராய நாயக்கர் அவர்களது வரலாறு அல்லது பிற வன்னிய குல க்ஷத்திரிய வள்ளல்களைப் பற்றிய வாழ்க்கை வரலாறு புத்தகங்கள் எழுதி வெளியிடப்பட்ட தமிழ் படைப்பாளி ஒருவரை தேர்ந்தெடுத்து நிறுவனர் நினைவாக ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) ரொக்கப் பரிசு வழங்க முடிவு செய்துள்ளது.

தகுதியுள்ள தமிழறிஞர்கள் மேலே குறிப்பிட்டபடி தங்களால் வெளியிடப்பட்ட புத்தகங்கள் மூன்று நகலுடன் 31.10.2018 தேதி மாலை 5.45க்குள் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ பின்வரும் முகவரியில் கிடைக்கும் வகையில் விண்ணப்பிக்கும் படி அறக்கட்டளை குழுமம் கேட்டுக் கொள்கிறது.

முகவரி:

செயலாளர்,
பெ.தெ.லீ. செங்கல்வராய நாயக்கர் அறக்கட்டளை,
எண்.2–3, ஈ.வி.கே. சம்பத் சாலை,
சென்னை – 600 007